# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 • இதழ் Issue : 114 • புதன்கிழமை Wednesday • 22.07.2026 • பக்கங்கள் Pages:4 • ₹ 6 • ஈரோடு Erode


# தமிழக பட்ஜெட் ஆகஸ்ட் 5 ந் தேதி தாக்கல்

## சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் அறிவிப்பு



சென்னை:

2026–27ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை ஆகஸ்ட் 5 ஆம் தேதி காலை 10 மணிக்கு பேரவையில் தாக்கல் செய்யப்படும் என சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "2026–27 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை ஆகஸ்ட் 5ஆம் தேதி காலை 10 மணிக்கு பேரவையில் தாக்கல் செய்யப்படும். மேலும், ஆகஸ்ட் 6 ஆம் தேதி வேளாண் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும்.

பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட பிறகு, அலுவல் ஆய்வுக் கூட்டம் நடக்கும். அதில் பட்ஜெட் மீதான விவாதத்தை எத்தனை நாள் நடந்துவது என்பது உள்ளிட்ட முடிவுகள் எடுக்கப்படும்.

சட்டப்பேரவை நடவடிக்கைகள் முழுநேரலை செய்யப்படும். சட்டப்பேரவையில் முன்னர் கடைப்பிடித்து வந்த நடவடிக்கைகள்தான் தற்போதும் தொடரும். வாக்களித்த மற்றும் வாக்களிக்காத பெருமக்களும் வியந்து போற்றி பாராட்டுகின்ற அளவுக்கு இந்த நிதிநிலை இருக்கும் என்று நம்புகிறேன். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் முழு விவாதத்தில் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை சொல்ல அனைத்து உரிமையும் இருக்கிறது; அதேபோல மாற்றுக் கருத்துக்கள் சொல்லப்படும் போது அமைதியாக இருந்து அதைக் கேட்டு விவாதித்து, பின்னர் பதில் சொல்ல வேண்டும். இந்த முறையும் சட்டப்பேரவை அமைதியாக நடைபெற வேண்டும்என்று விரும்புகிறேன். சட்டப்பேரவை உறுப்பினர் மார்க்கண்டேயன் கைது செய்யப்பட்டிருக்கும் செய்திக்குறிப்பு எங்களுக்கு வந்துள்ளது. பேரவைத் தலைவரை கேட்டுவிட்டுதான், சட்டப்பேரவை உறுப்பினரை கைது செய்ய வேண்டும் என்கிற விதி இல்லை. சட்டப்பேரவைக்குள் வைத்து கைது செய்யவே சபாநாயகர் அனுமதி தேவை.

பேரவைத் தலைவர் முன் அனுமதியின்றி எவரையும் பேரவை அமைப்பு எல்லைக்குள் கைது செய்யக்கூடாது: வெளியே நடைபெறும் சம்பவங்களில் கைது செய்ய பேரவைத் தலைவரின் அனுமதி தேவையில்லை. 24 மணி நேரத்திற்கு மேல் காவலில் வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டால், நான் முறையாக மற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். மார்க்கண்டேயன் கைது குறித்து தகவல் தெரிவிக்கப்படும்" என்றார்.

"சட்டப்பேரவையில் உள்ள உறுப்பினர்கள் பேரவைக்குள் சைகைகள் காட்டுவது விதிகளுக்கு முரணானது என கூறப்படுகிறது" என செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு, "முதல்வர் விஜய் அன்று பேரவையில் சைகை காட்டியதில் எந்த தவறும் இல்லை; விதிக்கு உட்பட்டுதான் அது நடந்தது" என்றார்..

அப்படியென்றால் எதிர்க்கட்சிகள் அனுமதி கேட்டாலும் அளிப்பீர்களா? என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு, "என்ன சைகை செய்யப்போகிறார் என எனக்கு தெரிந்தால், அனுமதி அளிப்பதா, வேண்டாமா என முடிவெடுப்பேன். முதல்வர் விஜய் என்ன சைகை அளிக்கப்போகிறார் என்பதை புரிந்து கொண்டு நான் அனுமதி அளித்தேன்" இவ்வாறு அவர் பதிலளித்தார்

தமிழகத்தில் தவெக அரசு அமைந்த பிறகு தாக்கல் செய்யப்படும் முதல் பட்ஜெட் என்பதால், தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகள் பல இதில் நிறைவேற்றப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முக்கியமாக, மகளிர் உரிமைத் தொகை ரூ. 2,500–ஆக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பு வருமா என்று பெண்கள் ஆர்வத்தோடு காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இருப்பினும், இந்த முதல் பட்ஜெட் மக்களின் எதிர்பார்ப்புகளை எந்தளவுக்குப் பூர்த்தி செய்யும் என்பது சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பிறகே தெளிவாகும்.

# புத்தகப் பை சுமை குறைப்பு மற்றும் பல திட்டங்கள்...

# கல்வித் திட்ட மாற்றம் குறித்து அமைச்சர் ராஜ்மோகன் அறிவிப்பு





தமிழ்நாடு கல்வி முறையில் பல புதிய மாற்றங்களை கொண்டு வரப் போகிறோம் என்று பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.

பள்ளிப் பாடத்திட்ட மாற்றம் குறித்த ஆலோசனை, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் இஸ்ரோ முன்னாள் விஞ்ஞானியும், புதிய பாடத்திட்ட வடிவமைப்புக் குழு தலைவருமான மயில்சாமி அண்ணாதுரை, இஸ்ரோ தலைவர் நாராயணன் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்த கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் ராஜ்மோகன்,"இந்தபுதிய கல்வி திட்டம் என்பது பெற்றோரை மதிக்கும் கல்வி திட்டமாக இருக்கும். சில விஷயங்கள் குறைக்கப்பட உள்ளன. மாணவர்களின் புத்தகப்பை சுமைகளை குறைக்க போகிறோம். எந்த அளவுக்கு புத்தகப்பையின் சுமை குறைகிறதோ, அந்த அளவுக்கு மாணவர்களின் மனச்சுமையும் குறையும்.

வானொலி, காணொளி மூலமாக இனி வரக்கூடிய காலங்களில் புத்தகங்கள் மாற போகின்றன. பள்ளி மாணவர்களுக்கு கதைகளின் வழியே கணிதமும், கலையுடன் இணைந்த அறிவியலும் கற்பிக்கப்படும்.

உலகமே செயற்கை நுண்ணறிவை (AI) நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. அதற்காக மனிதர்களின் வேலையை ஒருபோதும் பறிக்காது. மாணவர்களுக்கு PROMPT ENGINEERING கற்றுதருவது என்பதை கல்வி திட்டங்களில் கொண்டு வரப்போகிறோம். இஸ்ரோ உதவியுடன் அறிவியல் கல்வி மேம்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

மேலும் அரசியல் தலையீடு இல்லாமல் தகுதி மற்றும் திறமை மூலம் மட்டும்தான் இனி ஆசிரியர்கள் நியமனம் இருக்கும் என கூறிய அமைச்சர் ராஜ்மோகன், செய்தித்தாள் வாசிப்பு நேரத்தை ஊக்குவிக்கும் விதமாக ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் இனி செய்தித்தாள் வாசிப்பு நேரம் கொண்டு வரப்படும். இது மாணவர்களுக்கு படிக்கும் திறனையும், அச்சத்தையும் குறைக்கும்" என்றும் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர்," ஆசிரியர்கள் மாணவர்களின் மனம் புண்படும்படி அவர்களின் நிறம், தோற்றம் அல்லது உடல் அமைப்பை வைத்து அழைக்கக் கூடாது. மாணவர்களிடையே சமத்துவம், மரியாதை மற்றும் நல்லிணக்கத்தை வளர்க்கும் வகையில் செயல்பட வேண்டும்" என்றும் வலியுறுத்தினார்.

"இந்த கல்வித்திட்டம், ஒவ்வொரு சாமானியர்களின் குழந்தைகளுக்காக உருவாக்கப்பட்டுள்ளது" என்று கூறிய அமைச்சர் ராஜ்மோகன், "3ஆம் வகுப்பு வரை உள்ள ஆசிரியர்களுக்கு இதற்கான பயிற்சிகளை உருவாக்கியுள்ளோம்" என தெரிவித்தார்.

"குழந்தைகளின் வருங்காலத்தை கருத்தில் கொண்டு கல்வித் திட்டத்தை மாற்றியுள்ளோம். குழந்தைகளுக்கான கல்வியாக தமிழ்நாட்டின்கல்விமுறையை மாற்றுகிறோம். அனைவரும் இணைந்து கல்வியில் சிறந்த தலைமுறையை உருவாக்குவோம்" என்று கூறினார்.

# “மாணவர்கள் மீதான வன்முறைக்கு பிரதமர் மோடி மன்னிப்பு கோர வேண்டும்” ராகுல் காந்தி வலியுறுத்தல்



புதுடெல்லி: "டெல்லியில் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது தடியடி நடத்தப்பட்டதற்கு பிரதமர் நரேந்திர மோடி மாணவர்களிடம் மன்னிப்பு கோர வேண்டும்" என்று ராகுல் காந்தி வலியுறுத்தியுள்ளார்.

மேலும் தர்மேந்திர பிரதான் மட்டுமல்லாது, அமித் ஷா, பிரதமர் மோடி உள்ளிட்டோரும் ராஜினாமா செய்ய வேண்டும் என்றும் ராகுல் வலியுறுத்தியுள்ளார். நீட் வினாத்தாள் கசிவு உள்ளிட்ட முறைகேடுகளுக்குப் பொறுப்பேற்று மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கரப்பான்பூச்சி ஜனதா கட்சி சார்பில் டெல்லியில் (ஜூலை 20) பேரணி நடைபெற்றது.

அனுமதி அளிக்கப்படாத நிலையில் நடைபெற்றதால் பேரணியை போலீஸார் தடுத்து நிறுத்தினர். அப்போது இருதரப்புக்கும்இடையே மோதல் ஏற்பட்டது. பேரணியில் ஈடுபட்டவர்கள் போலீஸார்மீது கற்களை வீசினர். இதில், போலீஸார் சிலர் காயமடைந்தனர். பதிலுக்குபோராட்டக்காரர்கள் மீது போலீஸார் தடியடி நடத்தினர். மேலும், கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர். காயமடைந்த மாணவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். போராட்டக்காரர்கள் தாக்கப்பட்டது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் இரு அவைகளிலும் அமளியில் ஈடுபட்டன. நாடாளுமன்றத்துக்கு வெளியேயும் எதிர்க்கட்சிகள் தங்கள் கருத்துக்களை செய்தியாளர்களிடம் தெரிவித்தன.

நாடாளுமன்றத்துக்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, "மாணவர்கள் போராட்டம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என்று நாங்கள் சபாநாயகரிடம் கோரினோம். ஆனால், அவர் இதுகுறித்துவிவாதம் நடக்க வேண்டுமானால், அதற்கான அனுமதியை நான் அரசிடம் இருந்து பெற வேண்டும் என்று கூறுகிறார். எங்களிடம் இதை வெளிப்படையாகவே அவர் கூறினார். சம்பவத்துக்காக பிரதமர் மோடி இதுவரை மன்னிப்பு கூட கோரவில்லை. நமது நாட்டின் கல்வி முறையும் தேர்வு முறையும் சீர்குலைந்துவிட்டது. தேர்வு முறையை கரையான் அரித்துவிட்டது. இதைத்தான் எல்லோரும் சொல்கிறார்கள். இதில் எந்த தவறும் இல்லை. நாட்டில் இன்று இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் இல்லை. ஒரு கதவைத் தவிர மற்ற அனைத்தும் மூடப்பட்டுவிட்டன. அவர்களுக்கு இருக்கும் ஒரே வாய்ப்பு போட்டித் தேர்வுகள்தான். அதையும் சீர்குலைத்து விட்டார்கள். பல்கலைக்கழக துணை வேந்தர்களாக ஆர்எஸ்எஸ் பிரச்சாரகர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இந்த சூழலில், மாணவர்களுக்கு எதிர்காலம் என்பதே இல்லை. போராட்டத்தில் ஈடுபடும் கல்வி முறையையமட்டும்குறைகூறவில்லை. தங்களுக்கான எதிர்காலம் குறித்த கேள்வியை அவர்கள் முன்வைக்கிறார்கள். அவர்கள் அனைத்தையும் பார்க்கிறார்கள். அம்பானி இல்ல திருணத்தைப் பார்க்கிறார்கள். ஆயிரம் கோடி ரூபாய் அதற்கு செலவிடப்படுவதைப் பார்க்கிறார்கள். அதேநேரத்தில், தொழில்தொடங்கதங்களுக்கு பணம் இல்லாத நிலையையும் பார்க்கிறார்கள். மாணவர்கள் மீது நடந்த தாக்குதலுக்குப்பொறுப்பேற்று அமித் ஷா ராஜினமா செய்ய வேண்டும், அவருக்கும் மேலே இருக்கும் பிரதமர் மோடி ராஜினாமா செய்ய வேண்டும்." என தெரிவித்தார்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/

CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# "ஆதிதிராவிடர் நலத்துறை" பெயரை மாற்றக்கூடாது புரட்சி பாரதம் கட்சியினர் மாவட்ட ஆட்சியரிடம் மனு



தமிழக அரசு "ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை" என்ற பெயரை "சமூகநீதித்துறை" என மாற்றியதை கண்டித்தும், மீண்டும் பழைய பெயரிலேயே தொடர வலியுறுத்தியும் புரட்சி பாரதம் கட்சியினர் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர். கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று மாவட்ட ஆட்சியர் திரு. மதி. பத்மாஜா அவர்களை,புரட்சிபாரதம்கட்சியின் மாவட்ட செயலாளர்கள் தலைமையில் நிர்வாகிகள் சந்தித்தனர்.

அப்போது அளித்த மனுவில்,"ஆதிதிராவிடர் என்ற அடையாளம் 100 ஆண்டு கால வரலாறு கொண்டது. அயோத்திதாசர் பண்டிதர் முதல் பல தலைவர்கள் இந்த பெயருக்காக போராடியுள்ளனர். எனவே 'சமூகநீதித்துறை' என்ற பொதுப்பெயரை திரும்ப பெற்று 'ஆதிதிராவிடர் நலத்துறை' என்ற பெயரையே தொடர வேண்டும்" என கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் புரட்சி பாரதம் கட்சியின் மேற்கு மாவட்ட செயலாளர் ஓவியர் மு.பாபு, கிழக்கு மாவட்ட செயலாளர் முனைவர் K.K.ஏழுமலை, வடக்கு மாவட்ட செயலாளர் கோவிந்தன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் R.சிலம்பரசன் ஆகியோர் தலைமையேற்றனர்.

உடன் பிரசாந்த், விஜயபாஸ்கர், முருகன், வினோத், கெங்கசலம் உள்ளிட்ட கட்சியின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### தமிழக அரசு அண்மையில் அறிவித்த மகளிர் தரமான வேலைவாய்ப்புத்திட்டம்

# எதிர்கால பொருளாதார வலிமையை தீர்மானிக்கும் முக்கியமான முயற்சிக்கு கோவையில் ஆல் பிசினெஸ் விமன் அமைப்பினர் வரவேற்பு



பெண்களுக்கான வேலைவாய்ப்பை அதிகரிக்கும் வகையில் அண்மையில்தமிழகஅரசு மகளிர் தரமான வேலைவாய்ப்புத் திட்டத்தை அறிவித்துள்ளது.

இந்நிலையில் இது தொடர்பாக கோவையில் செயல்பட்டு வரும், அனைத்து பிசினஸ் மகளிர் சங்க அமைப்பினர் செய்தியாளர்களை சந்தித்த அமைப்பின் நிறுவனர் ராதா பெல்லன் மற்றும் தலைவர் இந்திரா ஆகியோர் கூறியதாவது..

தமிழக அரசு அறிவித்துள்ள,இத்திட்டம்,பெண்களின் திறன் மேம்பாடு, பாதுகாப்பான பணிச்சூழல் மற்றும் தொழில் முனைவோருக்கான நிதி உதவிகளை உறுதி செய்யும் வகையில் இருப்பதாகவும்,இந்த திட்டத்தை வரவேற்பதாகவும் தெரிவித்தனர்..

இத்திட்டத்தின் கீழ் ஆலோசகர்களை நியமிக்கும் டெண்டர் பணிகளை அரசு தீவிரப்படுத்தியுள்ள நிலையில்,எங்களது அமைப்பு ஏற்கனவேசக்தி எனும் திட்டத்தை உருவாக்கி உள்ளதாக கூறிய அவர்,பெண்களுக்கான பாதுகாப்பான,நிலையான மற்றும் அதிக ஊதியம் தரும் வேலைகளை மாநில மற்றும் மாவட்ட அளவில் உருவாக்கும் சக்தி திட்டத்தை உருவாக்கி உள்ளதாக தெரிவித்தனர்.

தமிழக அரசு கொண்டு வரும் மகளிர்க்கான திட்டத்தில், பெண்களின் பொருளாதார சுதந்திரம், குடும்ப முன்னேற்றம், தொழில் வளர்ச்சி மற்றும் தமிழ்நாட்டின் எதிர்கால பொருளாதார வலிமையை தீர்மானி க்கும் முக்கியமான கொள்கை முயற்சியாக இருப்பதாக சுட்டி காட்டிய மகளிர் அமைப்பினர், பெண்களின் வேலைவாய்ப்பின் எண்ணிக்கையை உயர்த்துவது மட்டும் போதாது எனவும், வேலைவாய்ப்பின் தரத்தை உயர்த்துவதே தமிழ்நாட்டின் அடுத்த வளர்ச்சி இலக்காக இருக்க வேண்டும். என கோரிக்கை விடுத்தனர்..

எனவே தமிழக அரசு அறிவித்துள்ள புதிய திட்டத்தில், கோவையை துவக்கமாக கொண்டு பெண்களின் கருத்துகள், தொழில் நிறுவனங்களின் அனுபவங்கள் மற்றும் சமூகத்தின் பரிந்துரைகளை ஒருங்கிணைத்து தமிழ்நாடு அரசிடம் சமர்ப்பிக்க இருப்பதாக தெரிவித்தனர்.

இந்த சந்திப்பின் போது நிர்வாகிகள் சுனிதாகண்ணன்,சுமிதா செந்தில் குமார்,தாரா பிராசாத் மற்றும் உறுப்பினர்கள் உடனிருந்தனர்.





மகாசக்தி ஓம் வருகின்ற 16 8 2026 அன்று காலை 6:00 மணி முதல் மாலை 8மணி வரை நடைபெறுகிறது பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு தங்களின் வாழ்வாங்கு வாழ மேன்மை படுத்த இந்த யாகத்தில் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை மட்டுமே நடைபெறும்




ஈரோடு மாவட்டம், காஞ்சிக்கோவில், தினசரி சந்தையில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (21.07.2026) ஆய்வு மேற்கொண்டார்கள்

# பத்திரிகையாளர்களுக்கும் காவல்துறையினருக்கும் ஒரு நெருக்கமான உறவு வேண்டும்

## தூத்துக்குடி பத்திரிகையாளர்களிடம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா தகவல்



தூத்துக்குடி விளாத்திகுளம் திமுக சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன் தமிழக முதலமைச்சர் விஜயை கோவில்பட்டியில் நடைபெற்ற திமுக பொதுக்கூட்டத்தில் அவதூறாக பேசியதாக திங்கட்கிழமை காலை குற்றப்பிரிவு போலீசார் மார்க்கண்டேயன் எம்எல்ஏ வை விளாத்திகுளத்தில் கைது செய்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் கொண்டு வந்து 11 மணி நேரம் விசாரணை செய்தனர். விசாரணை முடிந்து இரவு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மருத்துவ பரிசோதனைக்கு மார்க்க ண்டேயன் எம்எல்ஏ வை கொண்டு வந்தபோது செய்தியாளர்கள்வீடியோ மற்றும் போட்டோ எடுக்க முயன்ற போது மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திபு பத்திரிகையாளர்களை மிகவும் கீழ்த்தரமாகவும் ஒருமையில் பேசினார். மேலும்ரவுடி போலஏடிஎஸ்பி திபு நாக்கை துருத்தி கொண்டு என்ன செய்ய வேண்டும் அடித்து பார்ப்போமா என்றுமிகவும்கீழ்தரமாக நடந்து கொண்டார் பத்திரிகையாளர்கள் தங்களுடைய கடமைகளை பணியாற்றிய போது மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திபு மிகவும் பத்திரிகையாளர்களிடம் தரக்குறைவாக நடந்து கொண்டது மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலேயே மாவட்ட கூடுதல் கண்காணிப்பாளர் திபு விற்கும் பத்திரிகையாளர்களுக்கும் கடும் வாக்குவாதம் மோதல் ஏற்பட்டது மார்க்கண்டேயன் எம் எல் ஏ மருத்துவ பரிசோதனை முடிந்து சென்ற பின்பு கிளம்ப தயாரான மாவட்ட கூடுதல் கண்காணிப்பாளர் திபு காரில் ஏறி கிளம்பும் போது பத்திரிகையாளர்கள் அனைவரும் ஒன்று கூடி எதிர்ப்பு தெரிவித்தனர். இதனையடுத்து தூத்துக்குடி பத்திரிகையாளர்கள் ஒன்று சேர்ந்து செவ்வாய்க்கிழமை காலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தாவை நேரில் சந்தித்து மாவட்ட கூடுதல் கண்காணிப்பாளர் திபு நடந்து கொண்ட விதம் பற்றி எடுத்துரைத்து கோரிக்கை மனு வழங்கினார்கள். அப்போது பத்திரிக்கையாளர்களிடம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக்குப்தாகூறுகையில் வரும் காலங்களில் இதுபோல ஒரு நிகழ்வு நடைபெறாமல் பார்த்துக் கொள்கிறேன் காவல்துறையினருக்கும் பத்திரிகையாளர்களுக்கும் ஒரு நெருக்கமான உறவு வேண்டும் அதற்குத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் வரும் மாதங்களில் மாதத்தில் ஒரு நாள் பத்திரிகையாளர் காவல்துறையினர் நட்புணர்வு இருக்கும் வகையில் கலந்துரையாடல் நடத்தப்படும் என்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா கூறினார்.

அப்போதுபத்திரிகையாளர்கள் சண்முகசுந்தரம், ராஜா சிதம்பரம், காட்சன், மோகன்ராஜ், அண்ணாதுரை, செந்தில் முருகன், முத்துராமன், ராஜன், விஜயகாந்த்,ராமச்சந்திரன், சங்கரநாராயணன், ஜெயக்குமார், மாரிமுத்து, செய்யதுஅலிசித்திக், மணிகண்டன், ராஜ், விஜய் உள்ளிட்ட பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டனர்

### கோவை மாவட்டம் சங்கனூர் அருகே கண்ணப்பநகரில் உள்ள

# ஸ்ரீ கருப்பராயன் திருக்கோவிலில், 1161ம் ஆண்டு குரும்ப நாயனாரின் குரு பூஜை விழா நடைபெற்றது



ஆண்டவனிடத்தில் இடையறாத அன்பும், அடியார்களுடைய உறவில் ஆர்வமும் உடைய பெரியவர் என்றழைக்கபடுபவர் குரும்ப நாயனார்.முந்தைய காலகட்டத்தில், சோழ நாட்டின் தலைநகரான மிழலை எனும் பகுதியில் வாழ்ந்தவர் குரும்ப நாயனார். இதன் காரணமாகவே இவரை பெருமிழலை குரும்ப நாயனார் என்று இச்சமூகம் அழைத்து கொண்டாடி வருகின்றது. இறைவன் திருவருளே இறவாத பெருஞ்செல்வம் என்ற, மெய்யுணர்வுவரம்பெற்றவராக திகழ்ந்தவர் குரும்பநாயனார்.இறைவனுடைய பக்தியை காட்டிலும், அடியாரின் தொண்டு,பக்தி எய்தற்கரிய சித்திகளை பெறும் என்பதற்கு சான்றாக வாழ்ந்தவர் குரும்ப நாயனார். இத்தகைய பெரியவரின் தொண்டை போற்றும் வகையில், 1161ம் ஆண்டு குருபூஜை விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. கோவை மாவட்டம் சங்கனூர் அடுத்த கண்ணப்ப நகரில் அமைந்துள்ள ஸ்ரீ கருப்பராயன் திருக்கோவில் வளாகத்தில் நடைபெற்ற இந்த குருபூஜை விழாவினை, கோவை மாவட்ட பெருமிழலை குரும்ப நாயனார் ஆன்மீக பேரவையினர் முன்னெடுத்து வழிநடத்தினர். குருபூஜைவிழாநிகழ்ச்சியில், சீர் வளர சீர், குருமகா சன்னிதானம், அருள்மிகு ஓதிமலை சிவனேச அடிகளார் கலந்து கொண்டு, அருளுரை வழங்கினார். கண்ணப்பநகர் கருப்பராயன் திருக்கோவில் பூசாரி சின்னச்சாமி அருள் தலைமை தாங்கி, குருபூஜையினை வழி நடத்தினார். இங்கு, அலங்கரீத்து வைக்க பட்டிருந்த குரும்ப நாயனாரின் திரு உருவ படத்திற்க்கு, யாக வேள்விகள் நடைபெற்று, அவரது மலரடி பாதத்தில் மலர் தூவி மரியாதை செய்தபடி குருபூஜை விழா சீறும் சிறப்புமாக நடைபெற்றது. இதில் திறலான பக்தர்கள் கலந்து கொண்டு அவரது மலரடி பாதத்தில், மலர்கள் தூவியும், அவரது, பாடல்களை பாடியும் குருபூஜை விழாவில் பங்கேற்றனர். இந்த நிகழ்ச்சியில் கோவை மாவட்ட பெருமிழலை குரும்ப நாயனார் ஆன்மீக பேரவை அமைப்பின் மாவட்ட தலைவர் ஆறுச்சாமி, பொது செயலாளர் தென்றல் நாகராஜ், புறநகர் மாவட்ட செயலாளர் குணசேகரன், மாவட்ட பொருளாளர் தேவராஜ், துணைபொதுச்செயலாளர்கள், புகழேந்தி, மற்றும் ராஜாராம், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### இன்றைய டிஜிட்டல் உலகில் புத்தகம் வாசிக்கும் பழக்கம் அரிதாகி வருகின்றது

# புத்தகம் வாசித்தால் மட்டுமே உங்களை நீங்களே செதுக்கி கொள்ள முடியும்

## பிரபல எழுத்தாளரும், திரைப்பட நடிகருமான அக்ஷய் சர்மா தெரிவித்துள்ளார்.

கோவை கொடிசியா வளாகத்தில், கோயம்புத்தூர் புக் பெஸ்டிவல், மற்றும் கொடிசியா இணைந்து நடத்தும் மாபேரும் புத்தக திருவிழா நிகழ்ச்சி, ஜூலை 17ம் தேதி துவங்கபட்டு, நடைபெற்று வருகிறது. வரும் 26ம் தேதி வரை நடைபெறும் இக்கண்காட்சியில் 400க்கும் மேற்பட்ட அரங்குகளில், கோடிக்கணக்கில்




புத்தகங்கள் விற்பனைக்கு வைக்க பட்டுள்ளது.

இந்த புத்தக திருவிழாவில், கோவையை சேர்ந்த எழுத்தாளர்

அக்ஷய் சர்மா. இவர் இந்தியாவின் மிகப்பெரிய விற்பனை தளமான மார்க் ப்ளை பப்ளிஷர்ஸ் எனும் நிறுவனத்தை நடத்தி வருகின்றார்.

இவர் கடந்த 7 ஆண்டுகளாக புத்தகங்கள் எழுதி வருகின்றார். கடந்த 2018ம் ஆண்டு

த ப்ளையிங் ட்ரீம்ஸ் எனும் புத்தகத்தை எழுதி, அதனை நாடு முழுவதும் விற்பனை செய்துள்ளார். இந்தபுத்தகம்மட்டும்,சுமார்,3000த்திற்க்கும்மேற்பட்ட பிரதிகள் விற்பனையாகி உள்ள நிலையில், இவரது

இரண்டாவது புத்தகமாக, ரைட்டர் ஆன் அ மிஷின் எனும் புத்தகத்தை 2024ல் எழுதி இதனையும், நாடு முழுவதும் விற்பனை செய்துள்ளார். இதனை தொடர்ந்து தனது மூன்றாவது புத்தகத்தை, பாரத் ஆப் ஐகான்ஸ் எனும் புத்தக, கருவை, தொழிலதிபர் தீபக் ஜெயின் வழங்க அதனை அக்ஷய் சர்மா எழுதி, இந்த புத்தகமாகவெளியிட்டுள்ளார். இந்த நிலையில் 4வது புத்தகமாக, ப்ரம் அஷஸ் டூ கிங் எனும் புத்தகமும், 5வது புத்தகமாக மெனினிஸ்டு எனும் புத்தகங்களையும்தற்பொழுது எழுதி வருகிறார். இந்த இரு புத்தகங்களும் அடுத்த ஆண்டு வெளியிட உள்ளதாகதெரிவித்தார். கோவைபுத்தகதிருவிழாவில் அரங்கு அமைத்துள்ள இவர், தனது புத்தகங்களை காட்சிபடுத்தியதுடன் தனது புத்தகங்களுடன் ஏற்பட்ட நெருக்கத்தையும் வெளிபடுத்தி உள்ளார். இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர்..

நாடு முழுவதும் தனது புத்தகங்கள் பல்வேறு அலைகளை புத்தக ப்ரியர்கள் மத்தியில் ஏற்படுத்தி உள்ளது. அது தனக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி என்று தெரிவித்தவர், இன்றைய காலத்தில் புத்தகம் வாசிப்பது என்பது அரிதாக நடக்கின்ற நிகழ்வாக வருகின்றது. செல்போன், கனிணி, இன்டர்நெட், எனும் டிஜிட்டல் மாயையில் இருந்து பள்ளி மாணவிகள் முதல் இளைஞர்கள் வரை வெளிவர வேண்டும், அவர்கள் தங்கள் அறிவை செதுக்கிக் கொள்ள, புத்தகங்களை வாசிக்க முன்வர வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆலங்குளம் வட்டார மக்களின் பாரம்பரிய வழிபாட்டு உரிமை

## டி.டி.வி. தினகரனுக்கு அமமுக ஆலங்குளம் நகரச் செயலாளர் கோரிக்கை மனு



நெல்லை புறநகர் மேற்கு (தென்காசி மாவட்டம்) அம்மாமக்கள் முன்னேற்றக் கழகத்தின்நகரச்செயலாளர் எம்.எஸ். சுப்பையா, அமமுக பொதுச் செயலாளர் மக்கள் செல்வர் டி.டி.வி. தினகரன் அவர்களுக்கு கோரிக்கை மனு ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்த மனுவில், தென்காசி மாவட்டம் ஆலங்குளம் வட்டார மக்களுக்கு ஆடி அமாவாசையை முன்னிட்டு, நெல்லை மாவட்டம் காரையார் அணைப் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு மகாலிங்க சுவாமி – சினேகாம்பிகை சமேத சொரிமுத்து அய்யனார் திருக்கோவிலுக்கு பாரம்பரிய முறைப்படி சென்று வழிபட அரசு அனுமதி பெற்றுத் தருமாறு வலியுறுத்தியுள்ளார்.

மனுவில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: காரையார் அணைப் பகுதியில் பொதிகை மலைச்சாரலில் அமைந்துள்ள சொரிமுத்து அய்யனார் கோவில், தமிழகத்தின் மிகவும் பழமையான மற்றும் புகழ்பெற்ற காவல் தெய்வ வழிபாட்டுத் தலங்களில் ஒன்றாகும்.

ஆண்டுதோறும் ஆடி அமாவாசை திருவிழாவை முன்னிட்டு நெல்லை, தென்காசி, தூத்துக்குடி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த லட்சக்கணக்கான பக்தர்கள் இத்தலத்திற்கு வந்து வழிபடுவது வழக்கமாக உள்ளது.

இத்திருவிழாவின் முக்கிய சிறப்பம்சமாக, பக்தர்கள் காப்புக்கட்டி, வனப்பகுதிக்குள் தற்காலிகக் குடிசைகள் (கொட்டகைகள்) அமைத்து, சுமார் 10 நாட்கள் தங்கி சமைத்து வழிபடும் பாரம்பரியம் பல தலைமுறைகளாக தொடர்ந்து வருகிறது.

தற்போது இக்கோவில் களக்காடு–முண்டந்துறை புலிகள் காப்பகப் பகுதிக்குள் அமைந்துள்ளதால், வன விலங்குகள் மற்றும் இயற்கை வளங்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் அரசின் விதிமுறைகளைப் பின்பற்றி, ஆலங்குளம் வட்டார மக்களுக்கு முன்னோர்கள் வழிபட்ட அதே பாரம்பரிய முறையில் 10 நாட்கள் தங்கி வழிபட அனுமதி வழங்கதமிழகஅரசுக்கு கோரிக்கை வைக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

மேலும்,காரையார் அணைப்பகுதி மற்றும் சேர்வலாறு அணைப்பகுதிகளுக்கு பொதுமக்கள் சுற்றுலா சென்று வருவதற்கும் தமிழக அரசின் அனுமதியை பெற்றுத் தர நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் செல்வர் டி.டி.வி. தினகரன் அவர்களிடம் எம்.எஸ். சுப்பையா தனது கோரிக்கை மனுவில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# கோவையில் ரோட்டரி கிளப் மில்லேனியம் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் பொறுப்பேற்பு விழாவில்

## சமூக சேவை, மனிதநேயம், தலைமைத்துவம், பொதுநலப் பணிகளை சிறப்பாக முன்னெடுத்து செல்வதாக உறுதியளித்தனர்

ரோட்டரி மாவட்டம் 3206-க்கு உட்பட்ட கோவை மில்லேனியம் ரோட்டரி சங்கத்தின் 2026 மற்றும் 27-ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் பதவியேற்பு



விழா, கோவை, அவிநாசி சாலையில் உள்ள தனியார் உணவக அரங்கில் நடைபெற்றது.

இதில் சங்க உறுப்பினர்கள், குடும்பத்தினர், சிறப்பு விருந்தினர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

விழாவில் சுந்தரமூர்த்தி தலைவர் பொறுப்பையும், தானேஷ் செயலாளர் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டனர்.

இதனை தொடர்ந்து பல்வேறு நிலை நிர்வாகிகளாக பொறுப்பேற்ற அனைவரும், சமூக சேவை, மனிதநேயம், தலைமைத்துவம் மற்றும் பொதுநலப் பணிகளை சிறப்பாக முன்னெடுத்து செல்ல உறுதிமொழி ஏற்றனர்.

சிறப்பு விருந்தினராக பங்கேற்ற பி.எஸ்.ஜி. மருத்துவமனையின் இயக்குநர் டாக்டர் புவனேஸ்வரன், சமூக நலனுக்காக தொடர்ந்து செயல்பட்டு வரும் ரோட்டரி இயக்கத்தின் சேவைகளை பாராட்டியதுடன், மக்களின் வாழ்க்கையில் நீடித்த மாற்றத்தை ஏற்படுத்தும் பணிகளை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என வாழ்த்தினார்.

விழாவில் மாவட்ட இயக்குநர் ஓய்வு பெற்ற விமானப்படை துணை மார்ஷல் டாக்டர் விஜயகுமார் வாழ்த்துரை வழங்கினார்.

புதிய நிர்வாகிகளுக்கு வாழ்த்து தெரிவித்த அவர், புதுமை, நேர்மை மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவை சமூக சேவையை மேலும் வலுப்படுத்தும் எனக் குறிப்பிட்டார்.

புதிய தலைவராக பொறுப்பேற்ற சுந்தரமூர்த்தி, உறுப்பினர்களின் பங்களிப்பை அதிகரித்தல், இளைஞர் மேம்பாடு, மருத்துவ சேவை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கல்வி மற்றும் சமூக நலத் திட்டங்களை முன்னெடுப்பதே இந்த ஆண்டின் முக்கிய இலக்குகள் என தெரிவித்தார். செயலாளர் தானேஷ், அனைத்து உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்த உறுதியளித்தார்.

இதனைத் தொடர்ந்து, மகளிர் பிரிவு தலைவராக ஹேமா சுந்தரமூர்த்தி, செயலாளராக கவிதா தானேஷ் ஆகியோரும் இதே போல இளையோர் பிரிவின் புதிய தலைவராக பிரணாயா சுந்தரமூர்த்தி, செயலாளராக ரீமா தானேஷ் ஆகியோரும் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

விழாவையொட்டி, சமூக நலத் திட்டத்தின் ஒரு பகுதியாக சேவாலயம் முதியோர் இல்லத்திற்கு ஒரு மாதத்திற்குத் தேவையான மளிகைப் பொருட்கள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

மேலும், பொருளாதாரத்தில் பின்தங்கிய 50 மாணவர்களுக்கு பள்ளிப் பைகள் மற்றும் எழுது பொருட்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் ரோட்டரி சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டு புதிய நிர்வாகிகளுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.



ஸ்ரீ கௌமாரியம்மன் குழுமத்தின் இளைய இயக்குனர்.. மதிப்புமிகு சுதாகர் தமிழ்நாடு ஹோட்டல் சங்கத்தின் மாநிலச் செயலாளராக பதவி ஏற்றுள்ளார் . தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் சார்பில் இம்மண்ணின் மைந்தர் என்ற முறையிலும் அவர் பணிகள் நேர்மையாக சிறக்கட்டும் வாழ்த்துக்கள் நீண்ட ஆயுள் பலன்.. வாழ்க பல்லாண்டு என்று வாழ்த்துகிறோம்... கிராமப்புறத்தில் படித்த படிக்காத இளைஞர்களுக்கு.. அவருடைய ஹோட்டல் வளாகத்தில் வேலைக்கு அமர்த்தியுள்ளார்... மறுபக்கம் இயற்கை வளங்கள் சீராக இருக்க வேண்டும் என்று விவசாயிகள் ஒத்துழைப்போடு தன்னார் பாலர்கள் சமூக ஆர்வலர்கள் கொண்டு... குறுங்காடுகள் பசுமை திட்டம் நிறைய பகுதியில் பள்ளி வளாகம் மருத்துவமனை வளாகத்தில்... தொண்டு செய்து வருகிறார் . அவரை நாம் வாழ்த்தலாமே.

# மதுரை அப்போலோ மருத்துவமனையில்

## ரோபோடிக் நுட்பங்கள் மூலம் சிக்கலான சிறுநீரக பிரச்சனைகளுக்கு உலகத்தரம் வாய்ந்த சிகிச்சை

மதுரைஅப்போலோசிறப்புமருத்துவமனையானது. அதிநவீன நோய் கண்டறிதல் தொழில்நுட்பங்கள் மற்றும் மேம்பட்ட ரோபோடிக் அறுவை சிகிச்சை அமைப்புகளுடன் கூடிய உலகத்தரம் வாய்ந்த சிறுநீரகவியல் (Urology) மற்றும் ஆண்ட்ரோலஜி துறையைக்கொண்டுள்ளது.இத்துறைமிகக்குறைந்த பாதிப்பை ஏற்படுத்தும் (Minimally invasive).



எண்டோஸ்கோபிக், லேசர், நுண் அறுவை சிகிச்சை (Microsurgical) மற்றும் ரோபோடிக் நுட்பங்கள் மூலம் சிக்கலான சிறுநீரக பிரச்சனைகளுக்கு உலகத்தரம் வாய்ந்த சிகிச்சையை வழங்குகிறது இது அதிகத் துல்லியத்தன்மை விரைவான குணமடைதல் மற்றும் சிறந்த சிகிச்சை வாடுகளை உறுதி செய்கிறது.சிறப்பு ஆண்ட்ரோலஜி கிளினிக் மூலம் ஆண்களின் மலட்டுத்தன்மை, விந்தணு குறைபாடு. விறைப்புத்தன்மை கோளாறு (Erectile dysfunction), விரைவிலேயே விந்து வெளியேறுதல், வரிக்கோசீல் (Varicocele), ஆணுறுப்பு குறைபாடுகள், பெயிரோனி நோய் (Peyronie's disease), ஆண் ஹார்மோன் குறைபாடுகள் (ஆண்ட்ரோபாஸ்), அசோஸ்பெர்மியா (Azoospermia) மற்றும் குழந்தையின்மை போன்ற ஆரோக்கியப் பிரச்சனைகளுக்கு முழுமையான சிகிச்சை வழங்கப்படுகிறது.

மேலும் இந்தகிளினிக்கில் பாலியல் மற்றும் மனநல ஆலோசனை, திருமணத்திற்கு முந்தைய ஆண் கருவுறுதல் பரிசோதனை, பிறவிக் குறியீட்டு பிறப்புறுப்பு குறைபாடுகளுக்கான பரிசோதனை, ஹார்மோன் பரிசோதனை, விந்து பரிசோதனை, கருவுறுதல் ஆலோசனை மற்றும் TESA (விந்தக விந்து உறிஞ்சுதல்), PESA (தோல் வழியாகவிந்தகநாளவிந்து உறிஞ்சுதல்), மற்றும் TESE (விந்தக விந்து அகற்றுதல்) போன்ற சிறப்பு விந்தணுக்கான சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.மதுரை அப்போலோ சிறப்பு மருத்துவமனையின் சிறுநீரக அறுவை சிகிச்சை மற்றும் ஆண்மையியல் நிபுணர் டாக்டர் ஆர். விஷ்ணுராஜா குறிப்பிடுகையில், 'குறைந்த பாதிப்பை ஏற்படுத்தும் (Minimally invasivel லேசர், மைக்ரோசர்ஜிக்கல் மற்றும் ரோபோடிக் உதவியுடன் கூடிய சிகிச்சை முறைகள் போன்ற விரிவான ஆண்ட்ரோலஜி சேவைகளை மதுரை அப்போலோ வழங்கி வருகிறது. விறைப்புத்தன்மை மற்றும் முன்கூட்டியே விந்து வெளியேறுதல் போன்ற பிரச்சனைகளுக்குச் சிகிச்சை அளிப்பது முதல், பிறவிக் குறியீட்டு பிறப்புறுப்பு குறைபாடுகள் மற்றும் ஆண்குறி வளைவுகளைத் திருத்துவது வரை, மேம்பட்ட பராமரிப்பு மூலம் ஆரோக்கியம், நம்பிக்கை மற்றும் வாழ்க்கைத்தரத்தை மீட்டெடுப்பதில் நாங்கள் கவனம் செலுத்துகிறோம் என்று தெரிவித்தார்

மதுரை அப்போலோ மருத்துவமனைகள் குழுமத்தின் தலைமைச் செயல் அதிகாரி டாக்டர் நிகில் திவாரி கூறுகையில், "எங்களின் சிறப்பு ஆண்ட்ரோலஜி கிளினிக் மூலம், திருமணத்திற்கு முந்தைய உடல் பரிசோதனைகள்,

ஆண் கருவுறுதல் பரிசோதனை, மேம்பட்ட நுண் அறுவை சிகிச்சை முறைகள் மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட சிகிச்சை உள்ளிட்ட விரிவான சேவைகள் மூலம் ஆண்களின் பாலியல் நல பராமரிப்பை மேம்படுத்துவதில் மதுரை அப்போலோவின் உறுதியைக் காட்டுகிறது அதிநவீன தொழில்நுட்பம், பன்முக நிபுணத்துவம் மற்றும் முழுமையான நோயாளி ரகசியத்தன்மை ஆகியவற்றை இணைப்பதன் மூலம் தென் தமிழகம் முழுவதும் உலகத்தரம் வாய்ந்த ஆண்களுக்கான பாலியல் பிரச்சனைகளுக்கு தீர்வுகளை வழங்க நாங்கள் இலக்கு கொண்டுள்ளோம்' என்று தெரிவித்தார்

# போதை இல்லா தென்காசியை உருவாக்கும் நோக்கில் விழிப்புணர்வு பிரச்சார கூட்டம்

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியில்,



முதன்மை சேவகர் அண்ணாமலை அவர்களின் "We The Leaders" இயக்கத்தின் சார்பில், "போதை இல்லா தென்காசி" உருவாக்கும் நோக்கில் போதை விழிப்புணர்வு பிரச்சார கூட்டம் கடையநல்லூர் புதிய பேருந்து நிலையம் முன்பு நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கடையநல்லூர் சுப்ரமணியன், கொடிக்குறிச்சி ஊராட்சி மன்றத் தலைவர் தெட்சிணா மூர்த்தி, இடைகால் கருப்பசாமி மற்றும் தென்காசி முத்துசெல்வம் ஆகியோர் செய்திருந்தனர்.

நிகழ்ச்சியில் செந்தில்குமரன், சூரிய புத்திரன், வழக்கறிஞர் முத்து கிருஷ்ணன், சுப்ரமணியன், ஆறுமுகம், முன்னாள் காவல் ஆய்வாளர் ஆறுமுகசாமி, மருத்துவர் லட்சுமணன், சூரிய பிரகாஷ், முத்துவேல் கிருஷ்ணாபுரம் செந்தில், சச்சிதானந்தம், சுரேஷ், ரஞ்சித், தர்மராஜ், முப்புடாதி ராஜ், சங்கர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். 50-க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் பங்கேற்று, பொதுமக்களிடம் போதைப்பொருட்களின் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

மேலும், போதை பழக்கத்திலிருந்து இளைஞர்களையும், சமூகத்தையும் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து, நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரும் "போதைக்கு எதிராக உறுதியாக நிற்போம்; போதை இல்லா தென்காசியை உருவாக்க பாடுபடுவோம்" என்ற உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர்.

போதைப்பொருள் பயன்பாட்டை முற்றிலுமாக ஒழித்து, ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான தென்காசியை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என நிகழ்ச்சியில் வலியுறுத்தப்பட்டது.

# திமுக குறித்து அவதூறு பரப்பிய கவுன்சிலர் மீது வழக்கு தொடருவோம்

## திமுக பகுதி கழக செயலாளர் சரத் விக்னேஷ் பரபரப்பு பேட்டி

திமுக.,வில் இருந்த கவுன்சிலர் பாபு கட்சி குறித்து அவதூறு பரப்பியது குறித்து திமுக



கவுண்டம்பாளையம் பகுதி செயலாளர் சரத் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் மற்றும் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆதரவைப் பெற்று, முன்னாள் அமைச்சரும், கோவை மாவட்ட பொறுப்பாளருமான செந்தில் பாலாஜியின் தயவால் கவுன்சிலர் பாபு வெற்றி பெற்றார்.

தற்போது அவர், மிக மோசமாக, பொய்யான ஒரு குற்றச்சாட்டைத் தெரிவித்து திமுக.,விலிருந்துவெளியேறுவதாக கூறியுள்ளார். மக்களை மூளைச்சலவை செய்து, குறுக்கு வழியில் திமுக அரசைப்பற்றிபலபொய்யான அவதூறுகளைத் தெரிவித்துதவெக.,ஆட்சி பிடித்து உள்ளது. கவுன்சிலர் பாபு சென்னையில் விஜய் பதவியேற்ற அன்றே தவெக.,விற்கு சென்று விட்டார். அதற்கான ஆதாரங்கள் எங்களின் உள்ளது. அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிந்து ஓடி விட்டார். பாபு கரூர் கம்பெனி என்று சொல்கிறார். ஆனால் தற்போது அவர், மார்ட்டின் கம்பெனியில் சேர்ந்துள்ளார். கவுன்சிலராக வெற்றி பெற்ற போது அவர், கரூர் காரர்களே என்னை ஜெயிக்க வைத்ததாகத் தெரிவித்துள்ளார். இன்று 96 கவுன்சிலர்கள், 31 பேரூராட்சி, 8 நகராட்சிகளைப் பிடித்ததற்குத் செந்தில் பாலாஜியே காரணம். பாபு தனது ரியல் எஸ்டேட் தொழிலை பாதுகாக்க தவெக.,விற்கு சென்றுள்ளார். கவுன்சிலர் பாபு தனது அவதூறு கருத்தை திரும்ப பெற வேண்டும். இல்லை என்றால் அவர் மீது வழக்குத் தொடருவோம். கவுன்சிலர் அங்கீகாரத்தைப் பெற்று, கட்சி பொருப்பு வாங்கியும் ஒரு நாள் கூட அவர் வேலை செய்யவில்லை.

இவ்வாறு அவர் கூறினார். பேட்டியின்போது,

பெரியநாயக்கன்பாளையம் மத்திய ஒன்றிய செயலாளர் தாமோதரன், மாமன்ற உறுப்பினர்கள் சுபஸ்ரீ, கிருஷ்ணமூர்த்தி, வட்டச்செயலாளர்கள் டாக்டர்கணேஷ், சங்கர், ஆறுமுகம், கனகராஜ், மற்றும் வர்த்தக அணி துணை அமைப்பாளர் செந்தில் மூர்த்தி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# நடிகர் திலகம் சிவாஜி கணேசன் 25வது நினைவு நாள் அஞ்சலி நிகழ்வு ஈரோட்டில் நடைபெற்றது



தந்தை பெரியார் தலைமை அரசு மருத்துவமனை அருகே உள்ள பெருந்தலைவர் காமராஜர் சிலை முன்பு அலங்கரிக்கப்பட்ட நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் திருஉருவப்படத்திற்கு, ஈரோடு மாவட்ட சிவாஜி ரசிகர் மன்ற தலைவர் டி.கண்ணப்பன் தலைமையில் அஞ்சலி செலுத்தப்பட்டது

ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் பா.ராஜேஷ் ராஜப்பா திருஉருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து ஈரோடு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி அலுவலகமான ஜவஹர் இல்லத்தில் நடிகர் திலகத்தின் திருவுருவப்படத்திற்கு, ஈரோடு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் பா. ராஜேஷ் ராஜப்பா தலைமையில், முன்னாள் மாவட்ட தலைவர் டி.திருச்செல்வம் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தியவர்கள்:

முன்னாள் மாவட்ட தலைவர் ஈ.ஆர். ராஜேந்திரன் மண்டல தலைவர்கள் ஆர். விஜயபாஸ்கர் ,கே. புனிதன் மாவட்ட துணை தலைவர் கே.எஸ். செல்வம், தமிழ்நாடு தொழிலாளர் காங்கிரஸ் (TCTU) மாநில துணைத் தலைவர் குளம் எம். ராஜேந்திரன் மாவட்ட பொதுச்செயலாளர்கள்: டி. கண்ணப்பன், இரா. கனகராஜன், வி.கே. சச்சிதானந்தம், சூளை கதிர்வேல், டெக்ஸ் அன்பழகன் முன்னாள் மாமன்ற உறுப்பினர் கை. சுப்பிரமணியம், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் ஊடக பிரிவு தலைவர் ம. முகமது அர்சத், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை துணைத் தலைவர் கே.என். பாஷா ஈரோடு மாவட்ட காங்கிரஸ் நெசவாளர் அணி தலைவர் சி. மாரிமுத்து, SC பிரிவு மாவட்ட தலைவர் பிரபு மாவட்ட நிர்வாகிகள்: வழக்கறிஞர் ஜெய்ஹிந்த், எஸ். யுவராஜ் காங்கிரசின் மூத்த முன்னோடி ஈ.எம். சிராஜுதீன் சிவாஜி ரசிகர் மன்ற நிர்வாகிகள்: அன்பு காந்த், வீ.கா.மணியன், வெண்டிபாளையம் தர்மன், காமராஜ், சிவராமன், கணேஷ், பாலசுப்பிரமணியம், திருவள்ளுவர், சுப்பிரமணி, நடுப்பாளையம் வடிவேலு, சூரம்பட்டி ராஜமாணிக்கம், சூரம்பட்டி திருவேங்கடம் ஈரோடு மாநகர் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் செயலாளர் சிட்டி கல்கி, ஜோதி,ராஜிபுரம் சிவா, பி. குமரேசன், வேன் ராமசாமி, டீக்கடை லோகு, கனி ராவுத்தர், குளம் சபீர் அகமது, ஸ்வீட் கனகராஜன், விஜயராகவன், ஆர்.என். புதூர் பெருமாள், நூருதீன், நசியனூர் ராஜரத்தினம், நசியனூர் லோகநாயகி, டி. பாலசுப்பிரமணி, இ. ரவி* மற்றும் பலர் திரளாக கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள். கண்ணாடி"என்று வாழ்ந்து காட்டியநடிகர்திலகத்தின் புகழ் என்றும் நிலைத்து நிற்கும் என கலந்து கொண்டவர்கள் உருக்கமாக நினைவு கூர்ந்தனர்.



ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம்,காஞ்சிக்கோவில் தொடக்க வேளாண்மை சரக்கீட்டு கிடங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (21.07.2026) ஆய்வு மேற்கொண்டார்கள்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரத்தில் சொத்து தகராறில் தங்கையை அரிவாளால் வெட்டி கொலை செய்த அண்ணன் உட்பட நான்கு பேர் கைது, மேலும் தலைமறைவாகஉள்ளஇருவருக்குபோலீசார்வலைவீச்சு

# ராமநாதபுரத்தில் போதைப் பொருள் வைத்திருந்த 4 பேர் கைது



ராமநாதபுரம் புத்தேந்தல் ரயில்வே கேட் அருகே போலீஸார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, இருசக்கர வாகனத்தில் வந்த 3 இளைஞர்கள் போலீஸாரை கண்டதும் தப்பியோட முயற்சித்தனர். அவர்களை மடக்கிப் பிடித்து சோதனையிட்டதில், அவர்களிடம் 22 கிராம் போதைப்பொருள் மறைத்து வைத்திருந்தது தெரிந்தது. அவற்றை பறிமுதல் செய்தனர்.

இது தொடர்பாக, பரமக்குடியைச் சேர்ந்த மதன் ராஜ், மாயாகுளத்தைச் சேர்ந்த சிரஞ்சீவி, ராமநாதபுரம் வெற்றிவேலன் ஆகியோரை கைது செய்தனர். மேலும், தொடர்புடைய கீழக்கரையைச் சேர்ந்த சீனி சாகுல் ஹமீது என்பவரும் கைது செய்யப்பட்டார்.



ஈரோடு மாவட்டம், காஞ்சிக்கோவில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் செயல்பாடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (21.07.2026) ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்டம், காஞ்சிக்கோவில் பேரூராட்சிக்குட்பட்ட குளத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (21.07.2026) பார்வையிட்டு,ஆய்வு மேற்கொண்டார்கள்



ஈரோடு மாவட்டம், பெருந்துறை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் செயல்பாடுகளை குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (21.07.2026) பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்கள்



ஈரோடு மாவட்டம், காஞ்சிக்கோவில், பேரூராட்சி அலுவலகத்தின் செயல்பாடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கந்தசாமி நேற்று (21.07.2026) ஆய்வு மேற்கொண்டார்கள்.

# தமிழ்நாடு புதுச்சேரி பார் கவுன்சில் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஈரோடு எம்.அருள் முருகனுக்கு காங்கிரஸ் கட்சி சார்பில் வாழ்த்து



தமிழ்நாடு புதுச்சேரி பார் கவுன்சிலில் 23 உறுப்பினர்களை தேர்வு செய்வதற்கான தேர்தல் கடந்த மாதம் நடைபெற்று வாக்குகள் எண்ணிக்கை தொடர்ந்து நடைபெற்று வருகிறது

இந்த வாக்கு எண்ணிக்கையில் தற்போது வரை 15 புதிய உறுப்பினர்கள் வெற்றி பெற்றுள்ளனர் இதில் ஈரோடு அட்வகேட் அசோசியேசன் முன்னாள் செயலாளர் எம்.அருள் முருகன் தமிழ்நாடு பார் கவுன்சில் உறுப்பினராக வெற்றி பெற்றுள்ளார்.20/07/2026 அன்று ஈரோடு சம்பத் நகரில் உள்ள வழக்கறிஞர் எம்.பாலமுருகன் அலுவலகத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் வழக்கறிஞர் பிரிவு சார்பில் மூத்த வழக்கறிஞர் ஓ. எம்.ஆர்.பழனிவேல் தலைமையில் தமிழ்நாடு காங்கிரஸ் வழக்கறிஞர் பிரிவு மாநிலச் செயலாளர் சி.எம். ராஜேந்திரன், தமிழ்நாடு புதுச்சேரி பார் கவுன்சில் உறுப்பினராக வெற்றி பெற்ற எம். அருள் முருகன் அவர்களுக்கு சால்வை அணிவித்து வாழ்த்துக்கள் தெரிவித்தார். மாநில இணைச் செயலாளர் ஈ. வி. மாரியப்பா, ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் வழக்கறிஞர் பிரிவு தலைவர் ஈ.ஆர்.எஸ்.பிரகாஷ் , வழக்கறிஞர்கள் பொன்னப்பன், பெண்கர் வெஸ்லி, சனோப்பர் ஆகியோர் வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

# தூத்துக்குடியில் உள்ள உலக புகழ்பெற்ற பணி மைய மாதா பேராலய திருவிழா வருகிற 26 ஆம் தேதி கொடியேற்றத்துடன் துவங்க உள்ளது

## இந்த ஆண்டுக்குள் பனிமயமாதா பேராலயம் தேசிய பேராலயமாக மாற்ற அனைத்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பங்குத்தந்தை ஜான் செல்வம் தகவல்

தூத்துக்குடியில் உள்ள உலகப் புகழ்பெற்ற ரோம் வாடிகன் சிட்டியால் பசிலிக்கா அந்தஸ்து பெற்ற ஆலயம் பணிமயமாதா பேராலயம் இந்த ஆலயத்தின் 444 வது ஆண்டு திருவிழா வருகிற ஜூலை 26 ஆம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கி ஆகஸ்ட் 5ஆம் தேதி திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான மாதா சப்பர பவானி நடைபெற உள்ளது

இதைத்தொடர்ந்து இன்று பணிமயமாதா பேராலய வளாகத்தில் பனிமய மாதா பேராலய பங்குத்தந்தை ஜான் செல்வம் செய்தியாளர்களை சந்தித்தார் அப்போது அவர் கூறுகையில்

வருகிற 26 ஆம் தேதி தூத்துக்குடியில் உள்ள உலக புகழ்பெற்ற அனைத்து மதத்தினரும் ஜாதி மத வேறுபாடு இன்றி வழிபடக்கூடிய பணிமயமாதா பேராலய கொடியேற்றம் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது இதைத் தொடர்ந்து ஒவ்வொரு நாட்களும் ஒவ்வொரு மக்களுக்காக சிறப்பு திருப்பலியும் இரண்டாம் தேதி நற்கருணை பவனியும் நடைபெற உள்ளதாக தெரிவித்தார் ஆகஸ்ட் மாதம் ஐந்தாம் தேதி திருவிழா திருப்பலியும் மாதா சப்பரப்பவனி நடைபெற உள்ளதாக தெரிவித்தார்

இந்த திருவிழாவிற்காக மாவட்ட நிர்வாகம் மற்றும் மாநகராட்சி நிர்வாகம் சார்பில் பக்தர்களுக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் மாவட்ட காவல்துறை சார்பில் பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது எனக் கூறினார்

இந்த ஆண்டுதான் 444 ஆண்டு திருவிழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது வருகிற ஐந்தாம் தேதி திருவிழாவை முன்னிட்டு மாவட்ட நிர்வாகம் சார்பில் உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதாகவும் வரக்கூடிய ஆண்டில் பனிமய மாத பேராலயம் தேசிய பேராலயமாக மாறுவதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாகவும் பங்குத்தந்தை தெரிவித்தார்.



மேலும் பெருவிழா ஏற்பாடுகளை ஆலய அதிபர் மற்றும் பங்குத்தந்தை ஜான் செல்வம், உதவிப் பங்குத்தந்தையாக ஜெரால்டு, நிர்வாகக் குழுவின் துணைத் தலைவர் அண்டோ, செயலாளர் எட்வின் பாண்டியன், குழுவின் பொருளாளர் ஜோ சோரிஸ், துணைச் செயலாளர் பெனாட் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.










# 'In touch with Indian partners': Kremlin's response after Indian seafarers killed in Russian strike

*The Kremlin on Tuesday stated it was in touch with Indian authorities after four Indian nationals were killed in a Russian strike in the Black Sea.*

*A missile strike on a Black Sea cargo ship as it was leaving the port of Odesa in Ukraine killed at least 10 people, including four Indians. The remarks from Kremlin spokesperson Dmitry Peskov follow New Delhi's summons of the Russian chargé d'affaires over the incident. As per Ukraine, Kyiv said Russia hit the Golden Leo, a Guinea-Bissau-flagged ship manned by a crew from India and Syria, with three cruise missiles.As per the Ministry of External Affairs, along with the four Indian nationals who were killed, one was hospitalised in a critical condition.*

*"We extend our deepest condolences to the families of the deceased Indian nationals and wish the injured Indian national a speedy and full recovery," it added further.*

*In addition to this, India summoned the senior-most Russian diplomat to convey an "unequivocal condemnation" of a Russian attack on the merchant vessel.*



Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.